भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्रांकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

**नई दिल्ली, मगलवार, 11 अप्रैल, 2000/1921 सका**

New Delhi, Tuesday, 11th April 2000/1921 Saga

*புது தில்லி, 2000, ஏப்ரல் 11ஆம் நாள் செவ்வாய்க்கிழமை/1921 சக*

**Ministry of Law, Justice and Company Affairs**

(Law Department)

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டத் துறை)*

The translation in Tamil of The Charitable and Religious Trusts Act, 1920 (14 of 1920), The Spices Cess Act, 1986 (11 of 1986), The Indian Fisheries Act, 1897 (4 of 1897), are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under Clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50/1973).

அற மற்றும் சமயப் பொறுப்புக் கட்டளைகள் சட்டம், 1920 (14/1920), நறுமணப் பொருள்கள் மேல்வரிச் சட்டம், 1986 (11/1986) இந்திய மீனளங்கள் சட்டம், 1897 (4/1897) ஆகியவற்றின் தமிழ்மொழிபெயர்ப்பு, குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன் பிரிவு 2இன் கூறு (அ) வின் படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

Price Rs. 8.00

# இந்திய மீனளங்கள் சட்டம், 1897

## (சட்ட எண் 4/1897)

[1897, பிப்ரவரி 4]

மீனளங்கள் தொடர்பான குறித்த சில பொருட்பாடுகளுக்கு வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

மீனளங்கள் தொடர்பான சில பொருட்பாடுகளுக்கு வகைசெய்வது உகந்ததாக இருப்பதால்,

ஈங்கிதனால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுகிறது:—

*தலைப்பு மற்றும் அளாவுகை.*

1. (1) இந்தச் சட்டம், இந்திய மீனளங்கள் சட்டம், 1897 என்று வழங்கப்பெறும்.

(2) இது, 1956 நவம்பர் 1-க்கு அடுத்துமுன்பு பகுதி ஆ மாநிலங்களில் அடங்கியிருந்த ஆட்சிநிலவரைகள் நீங்கலாக இந்தியா முழுவதையும் அளாவிநிற்கும்.

*பிற மீனளங்கள் சட்டங்களுக்குத் துணையுறுச் சட்டமாகப் படிக்கப்படுதல் வேண்டும்.*

2. பொது வகையங்கள் விளக்கச் சட்டம், 1887இன் பிரிவு 8 மற்றும் பிரிவு 10இன் வகையங்களுக்கு உட்பட்டு, இந்தச் சட்டம் அளாவுகிற ஆட்சி நிலவரைகளில்
1/1887 உள்ள மீனளங்கள் தொடர்பாக, அவ்வப்போது செல்லாற்றலில் உள்ள பிற ஏதேனும் செய்சட்டங்களுககுத் துணையுறுச் சட்டமாக இந்தச் சட்டம், படிக்கப்படுதல் வேண்டும்.

*பொருள் வரையறைகள்.*

3. இந்தச் சட்டத்தில் பொருளுக்கு அல்லது தறுவாய்க்கு ஒவ்வாததாக எதுவும் இருந்தாலன்றி,—

(1) "மீன்" என்பது, சிப்பி மீனை உள்ளடக்கும்.

(2) "பொருத்தப்பட்ட பொறி" என்பது, நிலத்தில் பொருத்தப்பட்ட அல்லது பிற ஏதேனும் முறையில் நிலையானதாக வைக்கப்பட்ட வலை, கூண்டு, கண்ணி அல்லது மீனைப் பிடிப்பதற்கான பிற கருவி எதுவும் என்று பொருள்படும்.

(3) "தனியார் நீர்நிலை" என்பது, எந்த நீர்நிலையானது, எவரேனும் நபரின் தனிப்பட்ட சொத்தாக இருக்கிறதோ அல்லது எதில் நபர் எவரும் அப்போதைக்குச் சொந்தக்காரர், குத்தகைதாரர் அல்லது பிற ஏதேனும் தன்மையில் மீன் பிடிப்பதற்கான ஒரு தனி உரிமையைப் பெற்றிருக்கிறாரோ அந்த நீர்நிலை என்று பொருள்படும்.

*விளக்கம்*.—இந்தப் பொருள்வரையறையின் பொருளின்படி "தனியார் நீர்நிலை" என்பது, அங்கு பிற நபர்கள் மீன் பிடிக்கும் வழக்க உரிமையின் காரணமாக மட்டுமே அவ்வாறு இருப்பது அற்றுப்போகாது.

*உள்நாட்டு நீர்நிலைகளிலும் கடற்கரைகளிலும் வெடிமருந்துகளினால் மீனை அழித்தல்.*

4. (1) நபர் எவரும் டைனமைட் அல்லது வேறு வெடிப்பொருள் எதனையும், நீர் எதிலும் உள்ள மீன் எதனையும் பிடிக்கும் அல்லது அழிக்கும் நோக்கத்திற்காகப் பயன்படுத்துவாராயின், அவர் இரண்டு மாதம்வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குச் சிறைத்தீண்டனையோ அல்லது இருநூறு ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

(2) உட்பிரிவு (1)இல் உள்ள "நீர்நிலை" என்னும் சொல், கடற்கரையிலிருந்து மூன்று மைல்கள் வரையிலுள்ள கடலினை உள்ளடக்கும்; மற்றும் அந்த உட்பிரிவின்படி அத்தகைய கடலில் செய்யப்பட்ட ஒரு குற்றச்செயல் அத்தகைய கடற்கரையை ஒட்டியுள்ள நிலத்தில் செய்யப்பட்டிருந்தாற்போன்று விசாரிக்கப்படலாகும். தண்டிக்கப்படலாம் மற்றும் அனைத்து முறைகளிலும் நடவடிக்கை எடுக்கப்படலாம்.

*நீர் நிலைகளில் நஞ்சிடுவதன் மூலம் மீனை அழித்தல்.*

5. (1) நபர் எவரும், நஞ்சு, சுண்ணாம்பு அல்லது கெடுதலான பொருள் எதனையும், மீன் எதனையும் பிடிக்கும் அல்லது அழிக்கும் நோக்கத்துடன் நீர்நிலை எதிலும் போடுவாராயின், அவர் இரண்டு மாதம் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத்தண்டனையோ அல்லது இருநூறு ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

(2) மாநில அரசாங்கமானது அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக குறித்துரைக்கப்பட்ட பகுதி எதிலும் இந்தப் பிரிவின் செயற்பாட்டைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்; மற்றும் அதே முறையில் அத்தகைய அறிவிக்கை எதனையும் மாற்றி அமைக்கலாம் அல்லது அறவு செய்யலாம்.

மாநில அரசாங்கத்தின் விதிகளின் மூலம் தெரிந்தெடுக்கப் பட்ட நீர்நிலைகளில் உள்ள மீன்களுக்குப் பாதுகாப்பு.

6. (1) இந்தப் பிரிவில் இதற்குப் பின்பு குறிக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக, மாநில அரசாங்கம் விதிகளை வகுக்கலாம்; மற்றும் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக சொல்லப்பட்ட அறிவிக்கையில் மாநில அரசாங்கத்தினால் குறித்துரைக்கப்படலாகும் விதிகள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும் தனியார் நீர்நிலைகள் அல்லாத நீர்நிலைகளுக்குப் பொருந்துறுமாறு செய்யலாம்.

(2) மாநில அரசாங்கமானது அதே போன்ற அறிவிக்கை வாயிலாக, தனியார் நீர்நிலை அவற்றின் சொந்தக்காரரின் மற்றும் அங்கு அப்போதைக்கு மீன் பிடித்தலுக்கான தனிப்பட்ட உரிமை எதனையும் கொண்டுள்ள நபர்கள் அனைவரின் எழுத்து மூலமான இசைவுடன் அத்தகைய விதிகளை அல்லது அவற்றில் எதனையும் பொருந்துறுமாறும் கூட செய்யலாம்.

(3) அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும் தடைசெய்யலாம் அல்லது ஒழுங்குறுத்தலாம், அதாவது,—

(அ) நிலையான பொறிகளை நிறுவுதலும் அவற்றைப் பயன்படுத்துதலும்,

(ஆ) வேலிகளை அமைத்தல், மற்றும்

(இ) பயன்படுத்தப்படவேண்டிய வலைகளின் பருமானமும் வகையும் மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளும்.

(4) அத்தகைய விதிகள், இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்குக் குறித்துரைக்கப்பட்ட நீர்நிலை எதிலும் மீன்பிடித்தல் அனைத்தையும்கூட தடைசெய்யலாம்.

(5) இந்தப் பிரிவின்படி விதி எதனையும் வகுக்கும்போது மாநில அரசாங்கம்,—

(அ) அதன் மீறுகையானது, நூறு ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதம் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்றும், மற்றும் அந்த மீறுகையானது தொடர் மீறுகையாக இருக்கும்போது, அந்த மீறுகை நடைபெற்றுள்ளதாக மெய்ப்பிக்கப்பட்ட முதல் தண்டனைத் தீர்ப்புத் தேதிக்குப் பிந்திய ஒவ்வொரு நாளுக்கும் பத்து ரூபாய் வரை நீடிக்கலாகும் கூடுதல் அபராதம் விதித்தல் வேண்டுமென்றும் பணிக்கலாம்; மற்றும்

(ஆ) (i) அந்த விதிக்கு மீறுகையாக நிறுவப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட நிலையான பொறிகளை அல்லது பயன்படுத்தப்பட்ட வலைகளைக் கைப்பற்றுவதற்குத் தண்ட இழப்பு செய்வதற்கு மற்றும் அப்புறப்படுத்துவதற்கு, மற்றும்

(ii) அத்தகைய நிலையான பொறி அல்லது வலை எதன் துணையாலும் பிடிக்கப்பட்ட மீன் எதையும் தண்ட இழப்பு செய்வதற்கு

வகை செய்யலாம்.

(6) இந்தப் பிரிவின்படி விதிகள் வகுப்பதற்கான அதிகாரம், அவை முன்னதாக வெளியிடப்பட்டபின்பு செய்யப்படுதல் வேண்டும் என்னும் வரைக்கட்டிற்கு உட்பட்டதாகும்.

7. (1) காவல்துறை அலுவலர் எவரும் அல்லது இதற்கென மாநில அரசாங்கத்தினால் பெயர் குறிப்பிட்டோ அல்லது அப்போதைக்குப் பதவி எதனையும் வகிக்கும் வகையில் சிறப்பாக அதிகாரம் அளிக்கப்பட்ட பிறநபர், குற்றவியல் நடுவர் ஒருவரின் ஆணை எதுவுமின்றியும் பிடியாணையின்றியும், பிரிவு 4 அல்லது 5இன்படி அல்லது பிரிவு 6இன் விதிகளின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதனையும் அவரது கருத்துப்படி செய்கிற நபர் எவரையும், இந்த சட்டத்தின் படியான குற்றச் செயல்களுக்காகப் பிடியாணையின்றிக் கைது செய்தல்.

(அ) அந்த நபரின் பெயர், மற்றும் முகவரி அவருக்குத் தெரியாது இருக்குமாயின், மற்றும்

(ஆ) அந்த நபர் அவருடைய பெயர் மற்றும் முகவரியைக் கொடுக்க மறுப்பாராயின் அல்லது கொடுக்கப்பட்ட பெயர் மற்றும் முகவரியின் உண்மை குறித்து ஐயம் ஏற்படுவதற்குக் காரணம் இருக்குமாயின்

கைது செய்யலாம்.

(2) இந்தப் பிரிவின்படி கைது செய்யப்பட்ட நபர் ஒருவர், அவரது சரியான பெயர் மற்றும் முகவரி கண்டறியப்படுதல் வரையில் இருத்திவைக்கப்படலாம்:

வரம்புரையாக: அவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் எவரும், அவரைக் குற்றவியல் நடுவர் முன்பு கொண்டு வருவதற்குத் தேவையாகலாகும் காலத்திற்கு மேல், அவ்வாறு இருத்திவைப்பதற்கான குற்றவியல் நடுவரின் ஆணையின்படியன்றி, இருத்திவைக்கப்படுதலாகாது.